18-02-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 31.12.1998

## தைரியத்தின் ஆதாரத்தில் தன்னை உழைப்பிலிருந்து விடுபட்டவராக சதா வெற்றியாளராக அனுபவம் செய்திடுங்கள்

இன்று புதிய யுகத்தின் படைப்பாளர் பாப்தாதா தன்னுடைய மிகவும் அன்பான, சதா சகயோகியான மற்றும் மிகவும் நெருக்கமான குழந்தைகளுக்கு புது யுகம், புது வாழ்க்கை மற்றும் புது வருடத்திற்கான வாழ்த்துக்கள் கொடுப்பதற்காக வந்திருக்கின்றார்கள். நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகள் மிகவும் அன்போடு, பாப்தாதாவை உள்ளத்தில் முன்னால் வைத்து வாழ்த்துக் களைப் பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். பாப்தாதா குழந்தைகளுடைய புது வருடத்தினுடைய ஊக்க உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார்கள். பெரும்பான்மையான குழந்தைகள், அவர்கள் தூரத்தில் அமர்ந்து இருக்கின்றார்களோ, அருகில் அமர்ந்து இருக்கின்றார் களோ, அனை வருடைய மனதிலும் இந்த வருடத்தில் புதுமையை செய்து காட்டுவேன் என்ற இந்த ஊக்க உற்சாகம் உள்ளது. சுயத்தின் மாற்றம் ஆகட்டும் அல்லது சேவையின் வெற்றி ஆகட்டும், ஒவ்வொரு ஆத்மாவையும் சுபபாவனை, சுப விருப்பதின் மூலம் மாற்றுவதற்கான ஊக்கமும் நன்றாக உள்ளது, உற்சாகமும் நன்றாக உள்ளது. கூடவே, தைரியமும் யதா சக்தி (அவரவர் சக்திக்கேற்ப) உள்ளது. பாப்தாதா அப்பேற்பட்ட தைரியசாலி குழந்தைகளுக்கு ஒரு சங்கல்பத்திற்கு பின்னால் கோடி மடங்கு உதவியை அவசியம் செய்கின்றார்கள். ஆகையினால், தைரியத்துடன் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். ஒருபோதும் தனக்காகவோ அல்லது மற்ற ஆத்மாக்களுக்காகவோ தைரியத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், இந்த புதிய யுகமே தைரியம் வைப்பதனால் பறப்பதற்கான யுகம், வரதானி யுகம், புருஷோத்தம யுகம், நேரடியாக விதாதா (விதியை உருவாக்குபவர்) மூலம் அனைத்து சக்திகளின் ஆஸ்தியை சகஜமாக அடைவதற்கான யுகம் ஆகும். ஆகையினால், இந்த யுகத்தின் மகத்துவத்தை சதா நினைவில் வைத்திடுங்கள். எந்தவொரு காரியத்தை ஆரம்பம் செய்கின்றீர்கள் என்றாலும், அது சுய முயற்சி யாகட்டும் அல்லது விஷ்வ சேவையாகட்டும், சதா தைரியம் கொண்டு பாப்தாதாவின் உதவி பெறுவதன் மூலம் சுய புருஷார்த்தத்தில் மற்றும் சேவையில் வெற்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது உறுதியானது. நடந்தே ஆகவேண்டும். அசம்பவம், சம்பவமாக ஆகியே தீரவேண்டும், ஏனெனில், இந்த யுகம் வெற்றிக்கான யுகம் ஆகும். அசம்பவம், சம்பவம் ஆகுவதற்கான யுகம் ஆகும். ஆகையினால், நடக்குமா அல்லது நடக்காதா? எவ்வாறு நடக்கும்? இந்தக் கேள்விகள் இந்த யுகத்தில் பிராமண ஆத்மாக்களாகிய உங்களிடம் இல்லவே இல்லை. பிராமணர்களுடைய ஜாதகத் தில் வெற்றி என்பது அவர்களுடைய பிறப்பதிகாரம் ஆகும். அதிகாரி ஆத்மாக்கள் இவ்வாறு யோசிப்பதற்கான அவசியமே இல்லை, ஆஸ்தி கிடைத்தே தீரும்.

புது வருடத்தில், அனைத்து விசயங்களிலும், வெற்றியானது, சிரேஷ்ட பிராமண ஆத்மா வாகிய என்னுடைய அதிகாரமாகும் என்ற இந்த விசேஷமான நினைவை எமர்ஜ் செய்யுங்கள். இந்த நம்பிக்கையோடு, ஆன்மிக போதையோடு

பறந்து கொண்டே செல்லுங்கள். (அபிமானத்தின் போதை அல்ல, ஆன்மிக போதை) நிச்சயபுத்தி உடையவர்கள் சதா ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியாளர்களாகத் தான் இருப்பார்கள். அப்பேற்பட்ட நிச்சயபுத்தி உடைய பிராமண ஆத்மா வினுடைய நெற்றியில் வெற்றியினுடைய அதிர்ஷ்ட ரேகை எப்பொழுதுமே இருக்கிறது. வெற்றித் திலகம் எப்பொழுதுமே நெற்றியில் ஜொலித்துக் கொண்டு இருக்கின்றது. ஆகையினால், இந்த வருடத்தை சதா வெற்றியாளர் வருடமாக அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள். அத்தகைய நம்பிக்கை மற்றும் போதை உள்ளதா? இரட்டை அயல்நாட்டினருக்கு உள்ளதா? இரட்டை அயல்நாட்டினர் புத்திசாலிகள் (அனைவரும் கை அசைத்தார்கள்) மிகவும் நல்லது. திலகமானது பார்ப்பதற்குத் தெரிகின்றது. மேலும், பாரதவாசிகளோ ஏற்கனவே அதிர்ஷ்டசாலிகள் தான், ஏன்? பாரத பூமியே அதிர்ஷ்டசாலியானது ஆகும். ஆகையினால், அயல்நாட்டினரோ அல்லது பாரதவாசிகளோ, இருவருமே பாக்கிய விதாதாவின் குழந்தைகள் ஆவீர்கள், ஆகையினால், ஒவ்வொரு பிராமண குழந்தையும் வெற்றியாளர் ஆவார். தைரியத்தை மட்டும் எமர்ஜ் செய்யுங் கள். தைரியம் உள்ளே இருக்கவே செய்கிறது, ஏனெனில், மாஸ்டர் சர்வசக்திவான் ஆவீர்கள். அப்படித்தானே? (அனைவரும் கை அசைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்) கையை மிகவும் நன்றாக அசைக்கின்றீர்கள். இப்பொழுது மனதாலும் சதா தைரியத்தின் கையை அசைத்துக் கொண்டே இருக்க வேண்டும். பாப்தாதாவிற்கு, எங்களது ஒவ்வொரு குழந்தையும் வெற்றியடைந்த வெற்றியாளர்கள் என்ற மகிழ்ச்சி உள்ளது, பெருமிதம் உள்ளது. ஒரு முறை அல்ல, அனேக முறை வெற்றியடைந்த ஆத்மாக்கள் ஆவீர்கள். எனவே, என்ன ஆகுமோ தெரியவில்லை? என்று ஒருபோதும் யோசிக்கக் கூடாது. சந்தேகமான வார்த்தைகளைக் கொண்டு வரக்கூடாது. வெற்றி உள்ளது மற்றும் சதா இருக்கும். அனைவரும் உறுதியாக இருக்கின்றீர்களா? மிகவும் நல்லது. இப்பொழுது அங்கே சென்ற பிறகு, பலவீனமான செய்தியை எழுதக் கூடாது அதாவது, தாதிகளே, பாபா மாயா வந்துவிட்டது, இவ்வாறு எழுதக் கூடாது. மாயாஜீத். நாம் ஆகவில்லை என்றால் வேறு யார் ஆகுவார்கள்! என்ற இந்த ஆன்மிக போதையை எமர்ஜ் செய்யுங்கள். வெவ்வேறு காரியங்களில் மனம் மற்றும் புத்தி பிஸியாகி விடுகிறது அல்லவா, ஆதலால், போதை அமிழ்ந்து விடுகிறது (மெர்ஜ் ஆகிவிடுகிறது). ஆனால், கர்மம் செய்து கொண்டிருக்கும்பொழுதே இந்த வெற்றியின் ஆன்மிக போதை உள்ளதா? என்பதை இடை இடையில் சோதனை செய்யுங்கள். நம்பிக்கை இருந்தால் போதை நிச்சயமாக இருக்கும். நம்பிக்கையின் அடையாளம் போதை ஆகும் மற்றும் போதை உள்ளது என்றால் அவசியம் நம்பிக்கையும் இருக்கும். இரண்டிற்கும் சம்பந்தம் உள்ளது. ஆகையினால், இப்பொழுது 99ல் தன்னுடைய போதையை சதா எமர்ஜ்ஜாக வைத்திருக்க வேண்டும், அப்பொழுதே தவறு செய்யாதவராக ஆகுவீர்கள். தவறும் ஏற்படாது, உழைப்பும் இருக்காது. எப்பொழுது பாப்தாதா குழந்தைகள் உழைப்பதைப் பார்க்கின்றார்களோ, யுத்தம் செய்வதைப் பார்க்கின்றார்களோ, அப்பொழுது குழந்தைகளின் உழைப்பு தந்தைக்குப் பிடிக்க வில்லை என்பதை முன்பே பாப்தாதா கூறியிருக்கின்றார்கள். ஆகையினால், இந்தப் புதிய வருடத்தை எவ்வாறு கொண்டாடப் போகின்றீர்கள்? முக்தி வருடத்தைக் கொண்டாடிவிட்டீர்கள். எதிர்மறையானதை, வீணானதை சமாப்தி செய்துவிட்டீர்கள் என்றால் இந்த வருடம் தானாகவே உழைப்பிலிருந்து விடுபட்ட வருடமாக ஆகிவிடும். அனைவரும் போதையில் இருப்பவர்கள், உழைப்பு செய்பவர்கள் அல்ல.

போதை நன்றாக உள்ளதா அல்லது உழைப்பு நன்றாக உள்ளதா? போதை நன்றாக உள்ளது அல்லவா? எனவே, இந்த வருடம் மனதில், எண்ணத்திலும் கூட உழைப் பிலிருந்து விடுபட வேண்டும்.

நாங்கள் இப்பொழுதிலிருந்து 108 மணி மாலையில் அவசியம் வருவோம் என்ற மிகவும் நல்ல நல்ல தைரியம் நிறைந்த குழந்தைகளுடைய கடிதங்கள் பாப்தாதாவிடம் வந்திருக்கின்றன. அனேகருடைய நல்ல நல்ல ஊக்கம் நிறைந்த கடிதங்களும் வந்திருக்கின்றன மற்றும் ஆன்மிக உரையாடலில் கூட அனேகர் பாப்தாதாவிற்கு தங்களுடைய நம்பிக்கை மற்றும் தைரியம் நிறைந்த செய்தியைக் கொடுத்திருக்கின்றார்கள். அப்பேற்பட்ட குழந்தைகளுக்கு - தந்தை உங்கள் அனைவருடைய கடந்தவைகளுக்கு புள்ளி வைத்துவிட்டார். ஆகையினால், கடந்தவற்றைப் பற்றி சிந்திக்காதீர்கள், இப்பொழுது என்ன தைரியம் வைத்திருக்கின்றீர்களோ, அந்த தைரியம் மற்றும் உதவியினால் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் என்று பாப்தாதா கூறுகின்றார்கள். புதிய வருடத்தின் புதிய ஊக்கத்தையும் மிகவும் நல்ல நல்ல வார்த்தைகளில் வெளிநாட்டு குழந்தைகள், உள்நாட்டு குழந்தைகள் எழுதி இருக்கின்றார்கள். பாப்தாதா அப்பேற்பட்ட குழந்தைகளுக்கு - இதே தைரியத்தில், நம்பிக்கையில், போதையில் அமரர் ஆகுக என்ற வரதானம் கொடுக்கின்றார்கள். அமரராக இருப்பீர்கள் அல்லவா! இரட்டை அயல்நாட்டினர் அமரராக இருப்பீர்களா? பாரதவாசி களும் இருப்பீர்கள் அல்லவா? பாரதமோ நம்பர் (ரேங்க்) வாங்கியே ஆகவேண்டும்.

புதிய வருடத்தில் என்ன கொண்டாடுகின்றார்கள்? ஒன்று பரிசு கொடுக்கின்றார்கள் மற்றும் இரண்டாவது வாழ்த்துக்கள் கொடுக்கின்றார்கள். இனிப்பு நன்றாக சாப்பிடுகின்றார்கள், சாப்பிடக் கொடுக்கின்றார்கள். அதிகமாக ஆடவும், பாடவும் செய்கின்றார்கள். நீங்கள் இரவு 12 மணிக்குப் பிறகு ஒரு நாள் மட்டும் புதிய வருடத்தைக் கொண்டாடக் கூடாது. ஆனால், பிராமண குழந்தை களுக்கு இந்த புதிய யுகத்தில் ஒவ்வொரு நொடியும் புதியதாகும், ஒவ்வொரு சுவாசமும் புதியதாகும், ஒவ்வொரு எண்ணமும் புதியதாகும். ஆகையினால், சதா முழு வருடமும், ஒரு நாள் அல்ல, ஒரு வாரம் அல்ல, ஒரு மாதம் அல்ல, 4 மாதங்கள் அல்ல, 8 மாதங்கள் அல்ல, 12 மாதங் களும் சதா ஒருவருக்கொருவர் தில்குஷ் மிட்டாய் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். கொடுப்பீர்கள் தானே! தில்குஷ் மிட்டாயை பங்கிட்டுக் கொடுக்கத் தெரிகிறதா? அனைவரும் புத்திசாலிகள். எனவே, தில்குஷ் மிட்டாயை பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். யாராவது உங்களுடைய தில்குஷ் மிட்டாயை தனது சுபாவத்தின் காரணத்தினால், சமஸ்காரத்தின் காரணத் தினால், பிரச்சனையின் காரணத்தினால் ஒருவேளை சுவீகாரம் செய்யவில்லை என்றால் நீங்கள் உள்ளம் உடைந்து போகக் கூடாது. நீங்கள் கொடுத்துவிட்டீர்கள், கட்டளைப்படி நடந்ததற்கான உங்களுடைய சார்ட் பாப்தாதாவிடம் சேமிப்பாகிவிட்டது. நான் தில்குஷ் மிட்டாய் கொடுத்தேன், ஆனால், இவரோ கோபப்பட்டுவிட்டார் என்பதை பார்க்கக்கூடாது. பரவாயில்லை, அவர் இரகசியத்தை (ராஜ்) அறியவில்லை அல்லவா, ஆகையினாலேயே, கோபப்பட்டுவிட்டார் (நாராஜ்). நீங்கள் இரகசியத்தை அறிந்திருக்கிறீர்கள் அல்லவா! இவர், கணக்குவழக்கு அல்லது பிரச்சனைக்கு வசமாகி இருக்கிறார் என்ற இந்த இரகசியத்தையும் அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் கட்டளைப்படி நடப்பவர் ஆகுங்கள். சரிதானே!

கட்டளைப்படி நடப்பவர் ஆகவேண்டும் அல்லவா! இங்கேயோ ஆமாம் என்று மிகவும் நன்றாக சொல்கின்றீர்கள், நீங்கள் இங்கே பாருங்களேன், கையையும் மிகவும் நன்றாக அசைக்கின்றீர்கள், குஷிப்படுத்தி விடுகிறீர்கள். தலையையும் அசைக்கின்றீர்கள், கையையும் அசைக்கின்றீர்கள். ஆனால், பாப்தாதா பிறகும் கூட ஒவ்வொரு குழந்தையைப் பார்த்தும் எப்பொழுதுமே மகிழ்ச்சி அடைகின்றார்கள். எப்பொழுது என்னுடைய குழந்தை என்று சொல்லிவிட்டாரோ, பிறகு, யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும், பாபா பார்த்து மகிழ்ச்சி அடையவே செய்கின்றார். எப்படியாவது தகுதியாக்கி கூடவே அழைத்துச் சென்றே ஆக வேண்டும் என்று தந்தையும் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார். கூடவே செல்ல வேண்டும் அல்லவா? கூடவே செல்வதற்குத் தயாராக இருக்கின்றீர்களா? அனைவரும் தயாராக இருக்கின்றீர் களா? எவரெடியாக இருக்கின்றீர்களா? நல்லது. எவரெடியாகவும் இருக்கின்றீர்கள், மிகவும் நல்லது. எவர் ஹேப்பியாகவும் (எப்பொழுதும் மகிழ்ச்சியாக) இருக்கின்றீர் களா? எப்பொழுதாவது மாயை வந்து விட்டால்? பிறகு, கொஞ்சம், கொஞ்சம் மனதில் கூச்சலிடுவீர்களா? பாபா மாயை வந்துவிட்டது, வந்துவிட்டது என்று கூச்சலிடக்கூடாது, பறந்து விடவேண்டும். மாயை கீழே தங்கிவிடும், நீங்கள் மேலே பறந்து விட்டீர்கள் என்றால் மாயை பார்த்துக் கொண்டே இருக்கும். நல்லது, குஷியில் நடனமாடிக் கொண்டேயும் இருக்க வேண்டும் மற்றும் தில்குஷ் மிட்டாயை பங்கிட்டு கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். கூடவே, யாரெல்லாம் சம்பந்தம், தொடர்பில் வந்திருக்கின்றார்களோ, அவர்களுக்கு ஏதாவது ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும், எவரும் வெறும் கையோடு செல்லக் கூடாது, என்ன பரிசு கொடுப்பீர்கள்? உங்களிடமோ பரிசுகள் நிறைய இருக் கின்றன. பரிசு ஸ்டாக் (கையிருப்பு) உள்ளதா? கொடுப்பதில் கஞ்சன் ஆகக்கூடாது. கொடுத்துக் கொண்டே செல்ல வேண்டும். பறந்த உள்ளம் உடையவர் ஆகவேண்டும், ஒருவருக்கு சக்தியின் சகயோகம் கொடுங்கள், சக்தியின் அதிர்வலைகளைக் கொடுங்கள், ஒருவருக்கு ஏதாவது குணத்தின் பரிசு கொடுங்கள். வாயினால் அல்ல, ஆனால், தன்னுடைய முகம் மற்றும் நடத்தையினால் கொடுங்கள். ஒருவேளை, ஏதாவது ஒரு குணம் அல்லது சக்தி எமர்ஜ்ஜாக இல்லை என்றாலும், குறைந்ததிலும் குறைந்ததாக சின்ன ஒரு பரிசாவது கொடுக்க வேண்டும், அது என்ன? சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் பரிசு. இவர் என்னுடைய தேடிக் கண்டெடுக்கப்பட்ட சகோதரர் அல்லது சகோதரி என்ற சுப விருப்பம் கொள்ளுங்கள், தேடிக் கண்டெடுக்கப்பட்டவர் என்று நினைத்தீர்கள் என்றால் அசுபமான பாவனையில் இருந்து சுபமான பாவனையாக மாறிவிடும். இந்த சகோதரர், சகோதரிக்கும் பறக்கும் கலையினுடைய பாகம் கிடைக்கட்டும், இதற்காகவே சகயோகம் அல்லது சுபபாவனை செய்ய வேண்டும். நாங்கள் கொடுக்கின்றோம், அவர்கள் பெறுவதில்லை என்று சில குழந்தைகள் கூறுகின்றார்கள். நல்லது. சுப பாவனையைப் பெறவில்லை, எதையோ கொடுக் கின்றார்கள் அல்லவா. அசுபமான வார்த்தையை உங்களுக்குக் கொடுக்கட்டும், அசுபமான அதிர் வலைகளைக் கொடுக்கின்றார்கள், அசுபமான நடத்தை நடக்கின்றார்கள், ஆனால், நீங்கள் யார்? உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றுபவர்கள் தானே நீங்கள்? உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றுபவர்கள் தானே! உலகத்தை மாற்றம் செய்ய முடியும். மேலும், அவர்கள் ஒருவேளை உங்களை தவறுதலாக சொல்லிவிட்டார்கள், தவறுதலாக செயல்பட்டார்கள் என்றால் அவர்களை மாற்றம் செய்ய

முடியாதா? நேர்மறையான ரூபமாக மாற்றம் செய்ய முடியாதா? எதிர்மறையானதை எதிர்மறையானதாகவே தாரணை செய்வீர்களா அல்லது எதிர்மறையானதை நேர்மறையானதாக மாற்றம் செய்து நீங்கள் ஒவ்வொருவருக்கும் சுபபாவனை, சுபவிருப்பத்தின் பரிசு கொடுப்பீர்களா? சுபபாவனையின் ஸ்டாக்கை எப்பொழுதும் சேமித்து வைத்திடுங்கள். நீங்கள் கொடுத்துவிடுங்கள். மாற்றம் செய்துவிடுங்கள். அப்பொழுது விஷ்வத்தை மாற்றுபவர் என்ற உங்களுடைய பட்டம் என்ன உள்ளதோ, அது நடைமுறையில் வந்துவிடும். மேலும், யார் சதா ஒவ்வொருவரையும் மாற்றம் செய்து, தன்னுடைய உலகத்தை மாற்றம் செய்யும் காரியத்தை சாகாரத்தில் கொண்டு வருகின்றார்களோ, அவர்களே சாகார ரூபத்தில் 21 பிறவிகள் இ.ராஜ்ய அதிகாரியாக ஆகுவார்கள் என்பது உத்திரவாதம் (கியாரண்டி ஆகும்) ஆகும் என்பதை உறுதியாகப் புரிந்துகொள்ளுங்கள். அரியணையிலோ ஒரு முறை அமர்வார்கள், ஆனால், ஒவ்வொரு பிறவியிலும் இராஜ்ய குடும்பத்தில், இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களுடைய நெருக்கமான சம்பந்தத் தில் வருவார்கள். எனவே, உலகத்தை மாற்றம் செய்பவர்கள் தான் உலக இராஜ்ய அதிகாரியாக ஆகின்றார்கள். ஆகையினால், என்னுடைய கடமையே மாற்றம் செய்வது ஆகும் என்ற தன்னுடைய தொழிலை சதா நினைவில் வைத்திடுங்கள். வள்ளலின் குழந்தைகள் ஆவீர்கள், ஆதலால், வள்ளலாகி கொடுத்துக் கொண்டே செல்லுங்கள், அப்பொழுதே எதிர்காலத்தில் உங்களுடைய கையால் எவருக்கும் கொடுக்கமாட்டீர்கள், ஆனால், சதா உங்களுடைய இராஜ்யத் தில் ஒவ்வொரு ஆத்மாவும் நிறைந்தவர்களாக இருப்பார்கள். இது இந்த சமயத்தில் வள்ளலாகி இருப்பதற்கான பலன் ஆகும். ஆகையினால், இவர்கள் இதைச் செய்தார்கள், இவர்கள் இத்தனை முறை செய்தார்கள் என்று கணக்கு பார்க்கக் கூடாது, மாஸ்டர் வள்ளல் ஆகி பரிசு கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். மேலும், வாழ்த்துக்கள் என்ன கொடுப்பீர்கள்? பாருங்கள் யாருக்காவது யாரிடம் இருந்தாவது ஏதாவது கிடைக்கிறது என்றால் அவர்களுடைய வாயில் இருந்து, மனதில் இருந்து, உங்களுக்கு வாழ்த்துக்கள் என்ற இந்த வார்த்தைகளே வெளிப்படுகின்றன. ஒருவருக் கொருவர் குஷியைப் பகிரும்பொழுது வாழ்த்துக்கள் என்று கூறுகின்றார்கள். விழா கொண்டாடு கின்றீர்கள் என்றால் வாழ்த்துக்கள் என்று சொல்கின்றீர்கள். இவ்வாறு யார் உங்கள் முன்னால் வந்தாலும் வாயினால் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுங்கள், சங்கல்பத்தில் அப்படிப்பட்ட சிரேஷ்ட சங்கல்பம் செய்யுங்கள், அப்பொழுது, யாரெல்லாம் உங்களை சந்திப்பார்களோ, அவர்கள் ஒவ்வொரு நேரமும் உள்ளத்தில் இருந்து வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்களை உங்களுக்கு அவசியம் கொடுப்பார்கள். எனவே, அப்பேற்பட்ட வார்த்தைகளைப் பேசுங்கள், அப்பேற்பட்ட சம்பந்தம், தொடர்பில் வாருங்கள், அவர்களுடைய உள்ளத்தில் இருந்து, வாயில் இருந்து வாழ்த்துக் கள் வெளிப்பட வேண்டும் அல்லது ஆசீர்வாதங்கள் வெளிப்பட வேண்டும். வாழ்த்துக்கள் பெறுவதற்குத் தகுதியில்லாத வார்த்தைகளை வெளிப்படுத்தாதீர்கள். ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினம் போல் இருக்க வேண்டும். சாதாரண வார்த்தையாக இருக்கக் கூடாது. பாப்தாதா இப்பொழுது வரை ரிசல்ட்டில் பார்த்தார்கள், அது நாளை மாறிவிடும், ஆனால், இப்பொழுது வரை பார்த்தது என்னவென்றால் பேச்சில் பண்பு மற்றும் அன்பு என்ன இருக்க வேண்டுமோ, அந்த அன்பும் குறைந்துவிடுகிறது மற்றும் பண்பும் குறைந்துவிடுகிறது. ஆகையினால், அப்பேற்பட்ட இரத்தினம் போன்ற வார்த்தைகளைப் பேசுங்கள். நீங்கள் சுயம் வைரத்திற்கு சமமானவர்கள் எனில்,

ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினத் திற்கு சமமாக இருக்க வேண்டும். அப்பேற்பட்ட மதிப்பானவர்கள் ஆவீர்கள். சாதாரணமானவர்கள் அல்ல. சாதாரணமும் இல்லை, வீணானதும் இல்லை. மேலும், சில நேரங்களில் பாப்தாதா பார்க்கின்றார்கள், ரிசல்ட் சொல்லட்டுமா, ஏனென்றால், 12 மணிக்குப் பிறகு அனைத்தையும் முடிக்க வேண்டும் அல்லவா! எனவே, பாப்தாதா இதையும் பார்த்தார்கள் - சில சில குழந்தைகள் சின்ன சின்ன விசயத்தை அதிகமாக விஸ்தாரம் செய்கின்றார்கள், இதில் என்ன ஆகிறது? அதிகமான பேச்சு, மரமானது விஸ்தாரமான பிறகு விதை மறைந்துவிடுவது போல் சாரத்தை மறைத்துவிடுகிறது. நான் புரிய வைப்பதற்காக விஸ்தாரமாகச் சொல்கின்றேன் என்று அவர்கள் நினைக்கின்றார்கள், ஆனால், விஸ்தாரத்தில், நீங்கள் என்ன விசயத்தைப் புரியவைப்பதற்கு விரும்புகின்றீர்களோ, அதன் சாரம் மறைந்து விடுகின்றது. வார்த்தை, பேச்சிற்கும் சக்தி உள்ளது. வீணான பேச்சினால் வார்த்தைகளின் சக்தி குறைந்துவிடு கிறது. அதிகமாகப் பேசுபவர்களுடைய புத்தியின் சக்தியும் குறைந்துவிடுகிறது. ஸார்ட் மற்றும் ஸ்வீட் (குறைவாக மற்றும் இனிமையாக), இந்த இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்திடுங்கள். வேறு யாராவது சொல்கின்றார்கள் என்றால் அவர்களிடம் இவ்வளவு கேட்பதற்கு எனக்கு நேரம் இல்லை என்று சொல்லிவிடுகின்றார்கள், ஆனால், எப்பொழுது சுயம் சொல்கின்றார் களோ, அப்பொழுது நேரம் மறந்துவிடுகிறது. ஆகையினால், தன்னுடைய பொக்கிஷங்களின் ஸ்டாக்கை சேமிப்பு செய்யுங்கள். எண்ணம் என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள், பேச்சு என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள், சக்திகள் என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள், சமயம் என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள், குணங்கள் என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள். தினமும் இரவு தன்னுடைய இந்த பொக்கிஷங்களின் சேமிப்பு கணக்கை சோதனை செய்யுங்கள். எத்தனை எண்ணங்கள் வீணானதிற்கு பதிலாக சிறந்தது என்ற கணக்கில் சேமிப்பானது? நேரம் சிறந்தது என்ற கணக்கில் எவ்வளவு சேமிப்பானது? குணங்கள் மற்றும் சக்திகளால் சிரேஷ்ட காரியம் செய்தேனா? குணத்தை காரியத்தில் ஈடுபடுத்தினேனா? சக்தியை காரியத்தில் ஈடுபடுத்தினேனா? இதுவே சேமிப்பு செய்வதாகும். எனவே, அனைவரும் சங்கல்பம், சமயம், குணம், சக்தி ஆகிய இவற்றின் கணக்கை தினமும் இரவில் சோதனை செய்யுங்கள், பிறகு, எவ்வளவு கணக்கு சேமிப்பு ஆகியுள்ளது என்பதை கூட்டிப் பாருங்கள். இந்த சேமிப்பு தனக்கும் சகயோகம் கொடுத்துக் கொண்டே இருக்கும் மேலும், பிறருக்கும் கொடுக்கும். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று அனைவரும் கேட்கின்றீர்கள் அல்லவா? எனவே, இப்பொழுது இதைச் செய்ய வேண்டும். வாழ்த்துக்களும் பெற வேண்டும், பரிசும் கொடுக்க வேண்டும், சேமிப்பும் செய்ய வேண்டும் மற்றும் உழைப்பை விடவேண்டும். எப்பொழுது சேமிப்பின் மீது கவனம் கொடுப்பீர்களோ, அப்பொழுது உழைப்பு செய்ய வேண்டியது இருக்காது. உழைப்பிலிருந்து விடுபட்ட வருடத்தை கோலாகலமாகக் கொண்டாட வேண்டும். வீணானது மற்றும் எதிர்மறை யானதிலிருந்து விடுபட்ட வருடமாகக் கொண்டாட வேண்டும். பாப்தாதா முக்தி வருடத்தினுடைய ரிசல்ட்டை இப்பொழுது கேட்கவில்லை, பாப்தாதாவிற்கு நினைவு இருக் கின்றது. எத்தனை பேர் முக்தி வருடத்தைக் கொண்டாடினீர்கள் அல்லது மாதத்தைக் கொண்டாடி னீர்கள் என்ற ரிசல்ட்டைக் கேட்கட்டுமா? 6 மாதங்கள் கொண்டாடினீர்களா, பாதி கொண்டாடி னீர்களா, முழுவதுமாகக்

கொண்டாடினீர்களா என்ற இந்த அனைத்து கணக்கையும் கேட்கட்டுமா? நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள மிகவும் அன்பான, சமீபமான பிராமண ஆத்மாக்களுக்கு புது யுகத்தைப் படைப்பவரின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். இது விடைகொடுத்தல் மற்றும் வாழ்த்துக்களுக்கான சமயம் ஆகும். சங்கமமாகும் சமயம் ஆகும். பழைய வருடத்திற்கு விடை கொடுப்பது, பழைய வருடத்தின் கூடவே பழைய விசயங்கள், பழைய பிரச்சனைகள், பழைய சமஸ்காரங்கள் ஆகிய அனைத்திற்கும் விடைகொடுப்பது மற்றும் புதிய ஊக்கம், உற்சாகம் நிறைந்த வருடத்திற்கான வாழ்த்துக்களின் கூடவே பாராட்டுக்களும் உரித்தாகுக. இந்த வருடத்தை சதா உழைப்பிலிருந்து விடுபட்ட வருடமாகக் கொண்டாட வேண்டும். இந்த வருடத்தை சதா சுயம் மற்றும் அனைவருக்கும் தடையற்றவர் ஆகுக என்ற வரதானத்தைக் கொடுத்து கொண்டாட வேண்டும். சதா வெற்றி நம்முடைய பிறப்பதிகாரம் ஆகும் என்ற இந்த நம்பிக்கை மற்றும் போதையை ஒவ்வொரு கர்மம் செய்யும்பொழுதும் சதா எமர்ஜ்ஜாக வைத்திருக்கும் வருடமாக இந்த வருடத்தைக் கொண்டாட வேண்டும். இந்த வருடத்தில் ஒவ்வொருவரும் பாப்தாதா மற்றும் தாதிகள் மூலம் முதல் நம்பரில் செல்வதற்கான வெகுமதி மற்றும் பரிசு பெற வேண்டும், இதற்காக அனைத்து வெளிநாட்டினர் மற்றும் பாரதவாசிகள் முதல் நம்பரில் வருவதற்கான நம்பிக்கை வைத்து முன்னேற வேண்டும் மற்றும் முன்னேற்ற வேண்டும். மிக மிக அன்பு நினைவுகளுடன் சேர்த்து அனைத்து விதத்திலும் மனதால், வார்த்தைகளால், அனைத்து ரூபங்களில் பாப்தாதா பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டு இருக் கின்றார்கள். இப்பொழுது ஒரு வினாடி அனைவரும் சக்திசாலி சங்கல்பத்தோடு, உறுதித் தன்மையோடு பழைய பொருட்களுக்கு, பழைய வருடத்திற்கு, பழைய விசயங்களுக்கு சதாகாலத் திற்கும் விடை கொடுங்கள். ஒரு வினாடி அனைவரும் - உறுதித்தன்மையே வெற்றியாகும் என்ற இந்த உறுதியான சங்கல்பத்தில் நிலைத்திடுங்கள். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம் : டென்ஷனினால் குழப்பமடைந்த, துக்கமடைந்த ஆத்மாக்களுக்கு தைரியத்தைக் கொடுத்து முன்னேறச் செய்யக்கூடிய மாஸ்டர் கருணையுள்ளம் உடையவர் ஆகுவீர்களாக.

நிகழ்கால சமயத்தில் பெரும்பான்மையான ஆத்மாக்கள் உள்ளுக்குள் டென்ஷனினால் துக்க முடையவர்களாக, குழப்பமுடையவர்களாக இருக்கின்றார்கள், அவர்களிடத்தில் முன்னேறிச் செல்வதற்கான தைரியம் இருப்பதில்லை. நீங்கள் அவர்களுக்கு தைரியம் கொடுங்கள். எவ்வாறு ஒருவருக்கு கால் இல்லை என்றால் மரத்தாலான காலை தயாரித்து கொடுக்கின்றார்கள், அதனால் அவர்கள் நடந்துவிடுகின்றார்கள். அவ்வாறு நீங்கள் அவர்களுக்கு தைரியத் தினுடைய கால்கள் கொடுங்கள், ஏனென்றால் அஞ்ஞானி குழந்தைகளுடைய உள்ளார்ந்த நிலைமை என்ன என்பதை பாப்தாதா பார்க்கின்றார்கள். வெளிப் பகட்டோ மிகவும் நன்றாக டிப்டாப்பாக உள்ளது, ஆனால், உள்ளுக்குள் மிகவும் துக்கமானவர்களாக இருக்கின்றார்கள், ஆகையினால், மாஸ்டர் கருணை உள்ளம் உடைவர் ஆகுங்கள்.

சுலோகன்: பணிவானவர் ஆகுங்கள், மென்மையானவராக அல்ல,

பணிவுத்தன்மை தான் மகான் தன்மை ஆகும்.

குறிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சர்வதேச யோகா தினம் ஆகும். பிரம்மாவின் குழந்தைகள் அனைவரும் குழுவாக மாலை 6.30 முதல் 7.30 மணி வரை விசேஷமாக தன்னுடைய லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) சொரூபத்தில் நிலைத்திருந்து, ஞான சூரியனான தந்தையின் கிரணங்களுக்குக் கீழே அமர்ந்து முழு உலகத்திற்கும் சாந்தி, சக்தி மற்றும் தூய்மை யின் சகாஷ் கொடுக்கும் சேவை செய்ய வேண்டும்.